O/c

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM I

C 8092312

1. District : மாவட்டம் MADURAI — PS: காவல்நிலையம் VMAC — Year: ஆண்டு 2019 — FIR No.: மு.த.அ. எண் 16 — Date: நாள் 16.07.2019

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended — Sections பிரிவுகள்: 7 of PC Act 2018
   (ii) Act சட்டம்: by P.C (Amendment) Act 2018. — Sections பிரிவுகள்: and
   (iii) Act சட்டம்: Criminal Procedure Code. — Sections பிரிவுகள்: 102 Cr.P.C.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 15.07.2019 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் Before 20.30 Hrs — Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2019 — Time : நேரம் 12.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —do— — Time : நேரம் —do—

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written type.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30 K.M. —West direction
   Beat Number : முறைக் காவல் எண் —
   (b) Address : முகவரி SUB REGISTRAR OFFICE, CHEKKANOORANI, MADURAI DISTRICT.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Thirumalai — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ramakrishnan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் THASILDAR — (g) Address : முகவரி Deputy District Inspection Cell Officer, District Collector Office, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tr. K. CHELLACHAMY, Age 44/2019, S/o Kamatchi, Sub-Registrar (Admn) o/o District Registrar, Madurai South, i/c Sub Registrar, Chekkanoorani, Madurai District

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   This case was registered after getting the instructions from Superior officers and Legal Advisor of DVAC Chennai, hence no delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Two separate sheets with typed matter in Tamil from Page No. 3 to 6 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P.M. RAMESH Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........ PRABHU ........ on point of jurisdiction. V.A.C, Madurai.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே கண்ட முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வை எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........ பதவி ........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. முறையீட்டாளருக்கு / தகவல் தருநருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16.7.19 16/07/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகை பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்
16.07.19
15.00 Hrs.

Name: பெயர் A. AMBROSE JOVIAN
Rank: நிலை Inspector No. எண் V.A.C, Madurai.

o/c



Submitted,

இன்று 16.07.2019-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் அ.அம்புரோஸ் ஜெயராஜா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.இரா. திருமலை அவர்கள் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ந.க.எண். 1006/ஐ1/2019 நாள் : 16.07.2019-ன் படி என்னிடம் அளித்த புகார் மனு அதனுடன் இணைக்கப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். மேற்படி புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.R.திருமலை, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். 1006/ஐ1/2019, நாள் : 16.07.2019 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - செக்கானூரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. பார்வை : திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புகள், நாள் : 15.07.2019. நேற்று, 15.07.2019-ம் தேதியன்று செக்காணூரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் சொத்துப் பத்திரங்களுக்கு சார் பதிவாளர் லஞ்சம் பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு. அம்புரோஸ் ஜெயராஜா மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் செக்காணூரணி சென்று, செக்கானூரணி - திருமங்கலம் சாலையின் மேற்கு பக்கம் உள்ள அலுவலகத்தை தொடர்ந்து கண்காணித்த பின்னர், பொதுமக்கள் வெளியேறி சென்ற சிறிது நேரத்தில், இரவு சுமார் 08.30 மணிக்கு போலீஸ் பார்ட்டியுடன் மேற்சொன்ன அலுவலகத்தின் உள்ளே செல்லும் போது, அலுவலகத்தின் உள்ளே இருந்து கருப்பு நிற பேண்ட், வெள்ளை சட்டை அணிந்த ஒருவர், அவசரமாக கைப்பையுடன் வெளியேறி அலுவலக வாசலில் நின்று கொண்டிருந்த TN 58 C 5601 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா CD 100 SS பைக்கில் புறப்பட தயாராக இருந்தவரை நிறுத்தி அவரிடம் என்னையும், மற்றவர்களையும் அறிமுகம் செய்து கொண்டு விசாரித்ததில், அவர் தனது பெயர் செல்லச்சாமி என்றும், தான் வழக்கறிஞராக தொழில் செய்வதாகவும் கூறினார். அவரிடம் தொடர்ந்து விசாரணை செய்த போது மேற்படி நபர்தான் செக்கானூரணி சார்பதிவாளர் (பொறுப்பு) என்பது தெரியவந்தது. அவரிடம் மேலும் விசாரித்த போது, இன்று தமிழகத்தின் பல பகுதிகளிலும் சார்-பதிவாளர் அலுவலகங்களில் ரெய்டு நடப்பதாக சற்றுமுன்னர் தகவல் கிடைத்ததாகவும், அதனைத் தொடர்ந்து தான் அவசரமாக புறப்பட்டதாகவும்,

வழக்கறிஞர் என்று சொன்னால் விசாரிக்க மாட்டார்கள் என்று நினைத்து பொய் சொன்னதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, அவரை அலுவலகத்தின் உள்ளே அழைத்துச் சென்று அவரது இருக்கையில் அமரச் செய்து, அவரிடம் அலுவலகத்தை சோதனையிடுவது குறித்து தெரிவிக்கப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் திரு.மு.வீரமணி த/பெ முத்துமாரி என்ற கேமரா ஆப்பரேட்டரும், திரு.கு.சண்முகநாதன், த/பெ குருசாமி பிள்ளை என்ற அலுவலக உதவியாளரும், திரு.க.கிருஷ்ணன், த/பெ கருப்பையா என்ற TCS தற்காலிக பணியாளர் ஆகியோர் பணியில் இருந்தனர். தொடர்ந்து, சார்பதிவாளர் திரு.செல்லச்சாமியிடம் விசாரணை செய்த போது, திருமதி. மீனாட்சி என்ற சார்பதிவாளர் மருத்துவ விடுப்பில் சென்றுவிட்டதால், மாவட்ட பதிவாளர் அவர்கள் உத்தரவின் பேரில் கடந்த 09.07.2019 முதல் தான் மேற்படி அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணியாற்றுவதாக தெரிவித்தார். மேலும், நேற்று 15.07.2019-ம் தேதி பதிவான ஆவணங்கள் குறித்த கணிணிப்பதிவை பிரின்ட் அவுட் எடுத்து பார்வையிட்டதில், ஆவண வரிசை எண்கள் 1530/2019 முதல் 1574/2019 வரை மொத்தம் 46 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இருந்தது. தொடர்ந்து திரு. செல்லச்சாமி அவர்களிடம் அலுவலகத்தில் வேறு பணம் ஏதும் உள்ளதா என்று கேட்ட போது, அவர் அணிந்திருந்த பேன்ட்டின் வலது பக்க சைடு பாக்கெட்டிலிருந்து ரூபாய் பத்தாயிரம் ஒரு கத்தையாகவும் (ரூ.500 X 20), சட்டையின் முன்பையிலிருந்து ரூபாய் இரண்டாயிரம் ஒரு கத்தையாகவும் (ரூ.500 X 4), ரூபாய் எழுபது ஒரு கத்தையாகவும் (ரூ.50 X 1 + ரூ.10 X 2), ரூபாய் எட்டாயிரத்து ஐநூறு ஒரு கத்தையாகவும் (ரூ.2000 X 4 + ரூ.500 X 1), ரூபாய் மூவாயிரம் ஒரு கத்தையாகவும் (ரூ.500 X 6), ரூபாய் முந்நூறு ஒரு கத்தையாகவும் (ரூ.200X1 + ரூ.100 X 1), ரூபாய் ஆயிரத்து முந்நூறு ஒரு கத்தையாகவும் (ரூ.500 X 2 + ரூ.100 X 1 + ரூ.50 X 4) ஆக மொத்தம் ரூ.25,170/- (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து நூற்று எழுபது மட்டும்) ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவர் ஆஜர் செய்த பணம் குறித்து கேட்ட போது, அவர் தனது சொந்தப்பணம் என்று கூறினார். எனவே, சார்பதிவாளர் அலுவலக தனிநபர் கையிருப்புப்பதிவேடு 2019 தொகுதி எண் : என்ற பதிவேட்டை பார்வையிட்ட போது நேற்று 15.07.2019-ம் தேதியில் திரு.செல்லச்சாமி, சார்பதிவாளர் பெயருக்கு எதிரே எதுவும் எழுதப்படவில்லை. மேலும், சார்பதிவாளர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை. எனவே மேற்படி பணம் ரூ.25,170/- (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து நூற்று எழுபது மட்டும்) கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் எனக் கருதி அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து சோதனையின் போது, மெயின் ஹாலின் தெற்கே இருந்த உதவியாளர் வில்லங்கம் / நகல் விண்ணப்பிக்கும் இடம் என்ற அறையில் தெற்கு பக்க சுவரை ஒட்டி இருந்த 6 ½

அடி உயர ஐந்து அடுக்குகள் உள்ள பச்சை நிற ஸ்டீல் பீரோவின் மேல் தட்டின் கிழக்கு ஓரத்தில் ஆவணங்களுக்கு அடியில் ரூபாய் ஆயிரம் ஒரு கத்தையாகவும் (ரூ.500 X 1, ரூ.100 X 4, ரூ.50 X 2), ரூபாய் தொள்ளாயிரத்து ஐம்பது ஒரு கத்தையாகவும் (ரூ.100 X 9, ரூ.50 X 1) ஆக மொத்தம் ரூ.1,950/- (ரூபாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) பணம் காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து, சார்பதிவாளர் திரு.செல்லச் சாமியிடம் கேட்ட போது, மேற்படி பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். மேலும், அப்போது அலுவலில் இருந்த மேற்குறிப்பிட்ட 3 அலுவலர்களிடம் கேட்ட போது, அவர்களும் தங்களுக்கு தெரியாது என கூறினார்கள். எனவே, மேற்படி பணம் ரூ.1,950/- (ரூபாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, பணியாளர் திரு.சண்முகநாதனிடம் விசாரணை செய்த போது, அவர் தனது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.750/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அன்றைய ரொக்கப்பதிவேட்டில் ரூ.950/- கொண்டு வந்ததாக பதிவு செய்திருந்தன் பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், கேமரா ஆப்பரேட்டர் வீரமணியிடம் விசாரணை செய்த போது, அவர் தனது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.160/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதனை செலவுக்காக வீட்டிலிருந்து கொண்டு வந்ததாக தெரிவித்தன் பேரில், அவரிடமே அந்தப்பணம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், TCS பணியாளர் திரு. கிருஷ்ணனிடம் விசாரணை செய்த போது, அவர் தனது மணிபர்ஸில் வைத்திருந்த ரூ.270/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதனை தனது செலவுக்காக வைத்திருந்ததாக தெரிவித்தன் பேரில், அவரிடமே அந்தப்பணம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், தொடர் விசாரணைக்காக (1) செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலக தனி நபர் கையிருப்பு பதிவேடு - 2019, தொகுதி எண் - (பக்கம் 1 முதல் 43 வரை எழுதப்பட்டது). (2) செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு - 2019, தொகுதி எண் - 45 (பக்கம் 1 முதல் 15 வரை எழுதப்பட்டது) (3) தற்செயல் விடுப்பு பதிவேடு - 2019, தொகுதி எண் - 45 (12-ம் பக்கம் வரை எழுதப்பட்டது) (4) செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2019 Month July Section 41 Account Chekkanoorani Date 15.07.2019 (5) செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2019 Month July Account A Chekkanoorani, Date 15.07.2019 (6) திரு.செல்லச்சாமி, சார்பதிவாளர் அவர்களுக்கு பணி ஆணை பிறப்பித்து மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மதுரை தெற்கு அவர்கள் வழங்கிய செயல்முறைகள் எண் 3919/அ1/2019, நாள் 08.07.2019 ஆகிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. மேலும், திடீர் இணை ஆய்விற்காக உள்ளே சென்ற போது, மேற்படி அலுவலகத்தில் அமர்ந்திருந்த 3

ஆண்கள் மற்றும் ஒரு பெண்ணிடம் விசாரித்த போது அவர்கள் அனைவரும் பத்திரப் பதிவு செய்வதற்காக வந்ததாக தெரிவித்ததன் பேரிலும், அவர்களது விளக்கம் ஏற்றுக் கொள்ளும் படி இருந்ததாலும், அவர்களிடம் தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்த பின்னர், அவரவர் கொண்டு வந்த பணத்தை அவர்களிடமே திரும்ப ஒப்படைத்து அனுப்பப்பட்டது. மேற்படி விவரங்கள் அனைத்தும் 20.30 மணி முதல் 23.50 மணி வரை திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புகள் என தயாரிக்கப்பட்டு, அதில் நானும், ஆய்வாளரும், சார் பதிவாளர் திரு.செல்லச்சாமி மற்றும் அவருடன் பணியிலிருந்த 3 நபர்களும் கையெழுத்திட்டு, அதன் நகல் ஒன்றை திரு.செல்லச்சாமி அவர்களிடம் கொடுத்து ஒப்புகை பெறப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புகள், நாள் 15.07.2019 உடன் சம்பவ இடத்தில் இருந்த சார் பதிவாளர் திரு.கா.செல்லச்சாமி, அவருடன் அலுவலில் இருந்த திரு.கு.சண்முகநாதன், திரு.மு.வீரமணி, திரு.க.கிருஷ்ணன், பத்திரப் பதிவுக்காக காத்திருந்த திரு.பாண்டியராஜன், திரு.மனோகரன், திரு.பாக்கியநாதன், திருமதி.ரம்யாதேவி ஆகியோர் அளித்த வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.27,120/- ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். ஒப்பம்/- (இரா.திருமலை) 16.07.2019 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை. இணைப்பு : மேற்கண்டவாறு I received this petition on 16.07.2019 at 12.00 noon and got suitable instructions from the superior officers and legal advisor of Vigilance and Anti corruption, Chennai and Registered a case in Madurai V&AC Cr.No. 16/2019 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC on 16.07.2019 at 13.30 hrs. (s-d) A. Ambrose Jayaraja, Inspector of Police, V&AC, Madurai 16.07.2019.

The original FIR along with special report of Tr. R. Thirumalai, Deputy district cell officer, Madurai district dated 16.07.2019, Joint Surprise Check Mahazar dated 15.07.2019, Eight signed statements and case properties were enclosed herewith and submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies of FIR were sent to the officers concerned. As per the instructions, this case was handed over to Tr. P.M.Ramesh Prabhu, Inspector of Police, V&AC, Madurai for further investigation.

Inspector of Police,
V&AC, Madurai
16.07.19.